[திரு. வை. பாலசுந்தரம்]

சேவை இந்தியத் துணைக் கண்டத்திற்கே நம்முடைய மாநிலம் வழிகாட்டியாக இருக்கிற அளவுக்கு ஒரு சிறப்பை உருவாக்கி யிருக்கிறார்கள்.

1969-லே ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, அந்தச் சிறப்புத் திட்டத்தின் மூலம் தமிழகம் பூராவும் ஒளிவிளக்குகள் ஏற்றித்தாப் படவேண்டும் என்பதாக நமது கலைஞர் அவர்கள் நமது மின்சார வாரியத்தில் உள்ளவர்களை ஈடுபடுத்தி வருகிற வேகத்தைப் பார்க்கிறபோது 72-க்குள்ளாக விளக்குகளே இல்லாத பகுதி இருக்காது என்ற மகிழ்ச்சி நமக்குத் தருகிறது. மின்சார விளக்கில்லாத கிராமமே நமது தமிழகத்தில் இருக்காது. நாட்டு மக்கள் ஒரு மகிழ்ச்சியான, ஒளிமயமான வாழ்வைப் பெறுவார் கள் என்கிற மகிழ்ச்சிப் பெருக்கு ஏற்படுகிறது. அதன் அடிப் படையில் தான் இன்றைக்குப் பல மாவட்டங்களிலே மின் விளக்கு அமைப்பு முழுமை விழாவைக் கொண்டாடி வருகிறோம். 72-ஆம் ஆண்டு இறுதிக்குள் மின்சார சப்ளை பூரணத் தன்மைபெறும் என்கிற அறிவிப்பு நம் காதுகளில் இனிமையாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த அடிப்படையை உணர்ந்து 1967 வரை இருபதாயிரம் சொச்சம் கிராமங்களுக்கே மின் இணைப்புத் தரப் பட்டிருந்தது என்றால் ஏறத்தாழ இதுவரை 43 ஆயிரம் கிராமப் பகுதிகளுக்கு அரசாங்கம் மின் இணைப்பைத் தந்திருப்பதைப் பார்க்கிறோம். இன்று எனக்கு முன்பு பேசியவர்களும், நேற்றைய முன்தினத்திற்கு முன்தினம் பேசியவர்களும் பலயிடங்களில் மின் விளக்குகள் எரியவில்லை என்று கூறிய புகார்களை எண்ணிப் பார்த்தால் ஒளி புகாத ஊர்களுக்கு எல்லாம் மின் விளக்குகள் வந்துவிட்டனவே, இதன் காரணமாக இந்த அரசுக்கு மக்கள் மத்தியில் பெருமை உண்டாகிறதே என்கிற எரிச்சல் காரணமாக— விளக்குகளே எரியவில்லை, எரியவில்லை என்று சொன்னார்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 43 ஆயிரம் கிராமங் களுக்கு ஒளி விளக்குகளை ஊட்டித் தந்திருக்கிறோம், போட்டுத் தந்திருக்கிறோம் என்றால் பல்லாயிரக்கணக்கான பல்புகள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் ஒருசில எரியாமல் இருக்கலாம். அது அரசினர் குற்றமல்ல—ஆங்காங்கு வாழ்கிற மக்களின் குற்றமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா இடங்களுக்கும் விளக்குகளைப் போட்டுத் தா அரசு முயற்சிக்கின்ற அதே நேரத்தில் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், பொது மக்களாக இருந்தாலும் அரசுக்குக் கைகொடுக்கின்ற முறையில் அந்த விளக்குகளைப் பாதுகாத்து, பராமரிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுடைய தாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒளிவிளக்குகளை அமைத்துத் தருவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் இரண்டாவதாக இருக்கிறது, முதலாக இருப்பது ஹரியானா என்று சொன்னால் அந்த ஹரியானா தமிழகத்தில் 3-இல் ஒரு பங்குதான். ஆகவே இந்தியாவுக்கே தமிழகம் வழிகாட்டியாக இருக்கிறது என்று சொல்லலாம்.

1971 டிசம்பர் 17]

திரு. எம். சுரேந்திரன் : சார், சட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்றுலும், அதைத் தளர்த்தப் படவேண்டிய அவசியம் பற்றிச் சொன்ஞர்கள். அதே போன்று, தமிழ் நாட்டில் பேருந்துகளை தயாரிக்கும் போதும், கோடைகாலத்திற்கு மட்டுமின்றி, மழை காலத்திற்கும் ஏற்றவை களாகச் செய்ய அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்களின் யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஜீப் பேருந்து பணி

* 539 வினு—*திரு. கே. எ. வகாப் :* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மலைப்பகுதிகளுக்கு போக்குவரத்து ஏற்பட தனியார் துறையிலோ அல்லது பொதுத்துறையிலோ "ஜீப் பஸ் சர்விஸ்" விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களுக்கும், மலைப் பகுதிகளுக்கும் சாதாரண வழித்தடங்கள் இல்லாத காரணத்தால், ஜீப் பஸ் சர்வீஸ் என்கிற சிறிய பஸ்களை விட ஏற்பாடு செய்தால், கிராம மக்களுக்கும், மலைவாசிகளுக்கும் வசதியாக இருக்கும். அந்த வகையில் அரசு அமுல் படுத்த ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சில இடங்களில் அத்தகைய ஜீப் பஸ்கள் விட அனுமதி வழங்கப்பட்டது. அதிலுள்ள கஷ்டம் என்னவென்றுல், போதிய ஜீப்கள் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் வருவாயும் கிடைக்காததால், அவ்வளவாக இன்றையதினம் உரிமையாளர் களால் மேற்கொள்ளப்படாத சூழ்நிலை இருக்கிறது.

பழைய பேருந்துகளுக்கு பதில் புது பேருந்துகள்

* 540 வினு—*திரு. கா. வேழவேந்தன் :* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

வழித்தட எண். 80, 131, 101 ஆகியவற்றில் ஓடும் மிகப் பழைய வண்டி களை மாற்றி புது வண்டிகள் ஓட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனை யிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்து வழித்தட எண்கள் 80, 101, 131 ஆகியவற்றில் ஓடும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் பழைய வண்டிகள் அல்ல. அரசு வரையறுத்துள்ள அடிப்படைக் கோட்பாடுகளை ஒட்டி 1973 மே திங்கள் முதல் 1975 ஏப்ரல் வரை உள்ள கால அளவில்தான் இவை மாற்றப்படவேண்டியவையாகும்.